னர் திரு. ஆறுமுகம் அவர்கள் இல்லையே என்ற ஏக்கம் ஏற்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்குத் தகுந்தாற்போல் அமைச்சர் பெருமக்கள் பதில் சொல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், தந்த மாளிகையிலுள்ளவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய கொள்கை. அதே நேரத்தில் கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு கல்லெறியக்கூடாது என்ற கொள்கையும் இருந்து வருவதை திரு. துலுக்காணம் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பாசனத் திட்டங்களை நிறைவேற்ற அரசு செயல்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

## புராணசிங்குபாளையம் ஏரி.

*வினா எண் 254 —திரு கோ. ரகோத்தமன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம் வரதானூர் புராணசிங்குபாளையம் ஏரியின் நீர்ப்பாசன கால்வாய் நீண்ட நாட்களாக வெட்டப்படாததால் இந்த ஏரிக்கு நீர் வரத்து வராமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) தென்னாற்காடு மாவட்டம், கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வரதானூர் ஊராட்சி புராணசிங்குபாளையம் ஏரிக்குத் தட்டுப்பாடு ஏதுமின்றி தண்ணீர் வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கான பதில் எழவில்லை.

திரு கோ. ரகோத்தமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஏரியின் மூலமாக எத்தனை ஏக்கர் நிலம் பாசனத்திற்குப் பயன் பெறுகிறது? இந்த ஏரியின் உட்புறத்திலே ஆக்கிரமிப்பு செய்து, பயிர் செய்து கொண்டு வருவது இந்த அரசுக்குத் தெரியுமா? அவர்களை அப்புறப்படுத்துவதற்கும், மேலும் இந்தக் கால்வாயை விரிவு செய்வதன் மூலம் அதிகப் பாசன வசதி பெற முடியும். எனவே, அதை விரிவுபடுத்தவும் இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏரியின் மூலமாகப் பாசன வசதி பெறுவது 255 ஏக்கர். இந்த வரதானூர் ஏரியின் நீளம் 14·5 கிலோ மீட்டர். இந்த ஏரியின் மூலமாக ஏறத்தாழ 8 ஏரிகள்

1979 மார்ச்சு 6]

பலனடைகின்றன. அதன் மூலமாக 1,793 ஏக்கர் 20 சென்ட் நிலங்கள் பலனடைகின்றன. இதிலே ஆக்கிரமிப்பு இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆக்கிரமிப்புகள் இருக்கக்கூடாது என்பது இந்த அரசின் நோக்கம். இதைத்தான் விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து இந்த அரசு எதிர்பார்க்கிறது. ஆயினும், ஆக்கிரமிப்பு செய்திருப்பார்களானால், தயவு செய்து வெளியேற வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு கோ. ரகோத்தமன்: தலைவர் அவர்களே, இந்த வரதானூர் ஏரியின் உட்புறத்திலே சுமார் 100, 150 பம்பு செட்டுகள் வைத்து ஆக்கிரமிப்பு செய்து, பயிர் செய்து கொண்டு வருகிறார்கள். இந்த ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, பம்புசெட்டு வைத்து Unauthorised pumping of water from the canal செய்யக்கூடாது என்று ஏற்கனவே விவசாயப் பெருங்குடிமக்களுக்கு நாம் சொல்லியிருக்கிறோம். இப்படி அன் ஆதரைஸ்டாக தண்ணீர் எடுப்பதன் மூலமாக கீழே இருக்கக் கூடிய கடைகோடியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மருத்துவக் குழு.

*வினா எண் 255—திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

Medical Commission ஒன்று நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: ஆம், இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இந்த மெடிக்கல் கமிஷன் எப்போது நியமிக்கப்படும் என்ற விவரத்தையும், இந்த மெடிக்கல் கமிஷனிலே உறுப்பினர்கள் நியமிக்கப்படும்போது, பொதுமக்களின் சார்பாக சட்டமன்ற உறுப்பினர் ஒருவரையும் இந்தக் கமிஷனிலே நியமித்தால் நலமாக இருக்குமாகையால், அப்படி நியமிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.